## ‘திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்ற பிறகு

# தமிழ்நாட்டிற்குக் கிடைத்த பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள்!

**சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறும் நிலையில், தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டிற்கு இதுவரை கிடைத்த முதலீடுகள் பற்றிய விவரங்களைப் பார்க்கலாம்!**



● முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற, முதல் ஓராண்டில் உலகையே ஆட்டிப்படைத்த கொரோனா பரவலையும் சமாளித்து 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் முதலீடுகளை ஈர்த்தது தமிழ்நாடு.

● கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் தேதி நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 244 கோடி ரூபாய் மதிப்பிலான 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. இதன்மூலம் 3 லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் சாத்தியக்கூறுகளை தமிழ்நாடு அரசு ஏற்படுத்திக் கொடுத்தது.

● கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஐக்கிய அரபு நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, 6,100 கோடி அளவுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

● ‘மிட்சுபிஷி’ எலக்ட்ரிக் நிறுவனம் ஆயிரத்து 891 கோடி ரூபாய் முதலீட்டில், 2000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றமுத்தக் கருவிகள் உற்பத்தி ஆலை அமைக்க 2022 மே 9ஆம் தேதி புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

● 2022 மே 11ஆம் தேதி ‘ஹூண்டாய்’ மோட்டார் நிறுவனம் தமிழ்நாட்டில் 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

● முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஆண்டு மே மாதம் சிங்கப்பூர் பயணம் மேற்கொண்டபோது, சிங்கப்பூரைச் சேர்ந்த ஹைபி இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 312 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் மின்னணு பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

● இதேபோல், கடந்த ஆண்டு மே மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஜப்பான் பயணத்தின்போது ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஆறு நிறுவனங்களுடன் சுமார் 819 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

● முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய செயல்பாடுகளால், உலகின் முன்னணி நிறுவனங்கள் பல, தொழில் முதலீடு களைச் செய்ய தமிழ்நாட்டை நோக்கித் திரும்பியுள்ளன.

● தைவானை சேர்ந்தச் ‘பெகட்ரான்’ நிறுவனம், உலகில் உள்ள முன்னணி மின்னணு சாதனங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த இந்நிறுவனம் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய உள்ளது.

● இதேபோல், ஃபாக்ஸ்கான் நிறுவனமும் முதல் கட்டமாக பல்வேறு மின்னணுச் சாதனங்களை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது. அதன்படி 200 மில்லியன் டாலரை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய உள்ளது பாக்ஸ்கான் நிறுவனம்..

● மேலும், டெஸ்லா நிறுவனத்தின் முதலீட்டை தமிழ்நாட்டை நோக்கி கொண்டு வருவதற்கான சாதகமான சூழ்நிலைகள் உருவாகத் தொடங்கி உள்ளன.

● உலகின் நம்பர் ஒன் மருத்துவ எலக்ட்ரானிக் உற்பத்தி நிறுவனமான ஜப்பானைச் சேர்ந்த ‘ஓம்ரான்’, தமிழ்நாட்டில் உற்பத்தியைத் தொடங்கி உள்ளது.

● 128 கோடி ரூபாய்க்கு பொன்னேரியில் உள்ள மஹிந்திரா ஓர்கினிசில் புதிய ஆலையை அமைத்துள்ளது ‘ஓம்ரான்’ நிறுவனம். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஆண்டு மே 30ஆம் தேதிதான் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2 மாதங்களிலேயே, அதாவது ஜூலை 25ஆம் தேதி உற்பத்தி ஆலையைத் தொடங்கிவிட்டது.

● செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா ஆராய்ச்சி மையத்தில் 210 கோடி ரூபாய் முதலீட்டில், 1000த்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனம் நிறுவியுள்ள மின்கலன் பரிசோதனை ஆய்வகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கடந்த ஆண்டு ஜூலை மாதம் திறந்துவைத்தார்.

● மேலும், திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் செய்யார் தொழிற்பூங்காவில் உள்ள மஹிந்திரா SUV பரிசோதனைத் தளத்தில் 290 கோடி ரூபாய் முதலீட்டில் மின் வாகன விபத்து பரிசோதனை ஆய்வகம் அமைக்கும் பணிக்கு கடந்த ஜூலை மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது.

● தொழிலக மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டுவரும் SOL இந்தியா நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் 145 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராணிப்பேட்டை சிப்காட் நிலை 3ல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன் மற்றும் திரவ ஆர்கான் (Liquid Argon) உற்பத்தியை மேற்கொள்வதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணிக்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

● செங்கல்பட்டு மாவட்டத்தில் 515 கோடி ரூபாய் முதலீட்டில் 446 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்டஸ் நிறுவனம் புதிய தொழிற்சாலை அமைக்க கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

● பெரம்பலூர் மாவட்டம் - எறையூர் சிப்காட் தொழில் பூங்காவை கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் 28ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கிவைத்தார். எறையூர் சிப்காட்டில் 50 ஏக்கர் பரப்பளவில் ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணி பூங்காவிற்கும் அப்போது அடிக்கல் நாட்டப்பட்டது. ஓராண்டிற்குள் பணிகள் முடிவடைந்து 2023 நவம்பர் 28ஆம் தேதி தனது உற்பத்தியையும் தொடங்கி விட்டது.

● உலகப் புகழ்பெற்ற காலணி நிறுவனமான ‘அடிடாஸ்’, தனது உலகளாவிய திறன் மேம்பாட்டு மையத்தை சென்னையில் அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது. அடிடாஸ் சார்பில், சீனாவுக்கு வெளியே ஆசியாவில் அமையும் முதல் திறன் மேம்பாட்டு மையம் இதுவாகும்.

**முதலீட்டாளர்களின் முதல் தேர்வு, முதலீட்டாளர்களின் முதல் முகவரி, முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு எப்படித் திகழ்கின்றது என்பதற்கு இதுவே கண்கூடான சாட்சியாக உள்ளது.**

